**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 44/1998</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **25.02.2026** |
| **பெயர்** | **காத்தவராயன்** |
| **த/பெ** | **முனுசாமி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 11.45.**a.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. எனக்கு என்ன வயது என்றால் 66. வழக்கு தாக்கல் செய்த 1ம் வாதியை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. 1ம் பிரதிவாதியை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் நகை கடை வைத்திருந்தார் என்று தெரியும். அந்த நகை கடையை மீஞ்சூரில் வைத்திருந்தார் என்றால் தெரியாது. 1ம் வாதி என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் தெரியாது.

2. 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே என்ன பணப்பரிவர்த்தனை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி அவர் பெயரில் உள்ள வழக்கு சொத்தினை 1ம் வாதிக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் அரசாங்கம் 1ம் வாதியின் பெயரில் பட்டா வழங்கியது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்த பிறகு தான் 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பிறகு தான் அவர் சொல்லி தெரியவந்தது.

3. வழக்கு யார், யார் மீது தாக்கல் செய்துள்ளனர், எதற்காக தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், நான் பயிர் செய்கிறேன் எனக்கு சொந்தமான இடம் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நான்

வாங்கிய நிலத்தின் சர்வே எண் 79–ல் 1½ ஏக்கர். என்னை பொறுத்தவரையில் எனக்கு சொந்தமான சொத்து சர்வே எண் 79–ல் 1½ ஏக்கர் மட்டும் தானே தவிர வேறு எந்த நிலத்தை குறித்தும் இல்லை என்றால் சரிதான்.

4. எனது சர்வே எண் 79–ல் 1½ ஏக்கர் பத்திரம் பதிவாகி உள்ளதா என்றால் பதிவாகியுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ 2 ஆவணம் தான் அது என்றால் சரிதான். பி.சா.ஆ–2 கிரைய ஒப்பந்தம் ஆகும். என்னுடைய பதில் உரையில் பி.சா.ஆ 2 பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் பிரமாணவாக்குமூலம் தயார் செய்த போது ஆவணங்களை தேடிப்பார்த்த போது பி.சா.ஆ 2 ஆவணம் கிடைத்தது அதனால் தான் தற்போது தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த வரை பி.சா.ஆ 2 அடிப்டையில் கிரையப்பத்திரம் பதிவு செய்து கொண்டேனா என்றால் பதிவு செய்து கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ 1 தான் நான் கூறும் கிரையப்பத்திரமா என்றால் இல்லை. பி.சா.ஆ 1 பிறகு தான் பி.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

5. 1–ம் பிரதிவாதி உயிருடன் இருந்த போது மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரைய பத்திரம் செய்து கொண்டோமா என்றால் 1987–ல் செய்து கொண்டோம். அது பி.சா.ஆ 3 ஆகும். பி.சா.ஆ 2 ஆவணத்தில் தேதியிலும் மற்றும் சொத்து விவரத்திலும் திருத்தல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. அதை போல் பி.சா.ஆ 3 ஆவணத்திலும் தேதியிலும் மற்றும் சொத்து விவரத்திலும் திருத்தல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ 4 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் தான் உள்ளது.

6. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு என் தந்தை பெயரில் எப்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் என் தந்தை பெயரில் தான் கிரையம் வாங்கப்பட்டது. பொதுவாக சொத்திற்கு வழங்கப்படும் கிஸ்து ரசீதில் சர்வே எண் இருக்குமா அல்லது பட்டா எண் இருக்குமா என்றால் தெரியாது. வி.ஏ.ஒ எழுதி கொடுப்பது தான். பி.சா.ஆ 7 ல் எண் உள்ளதா அல்லது பட்டா எண் உள்ளதா என்றால் பட்டா எண் தான் உள்ளது. 1ம் வாதி தாக்கல் செய்துள்ள கிஸ்து ரசீதுகளில் பட்டா எண் தான் குறிப்பிட்டுள்ளது சர்வே எண் குறிப்பிடவில்லை என்று நான் கூறியிருப்பது தவறு என்றால் அந்த பட்டா எண்ணை வைத்து சர்வே எண் பார்த்துக்கொள்ளலாம்.

7. யார் யாருக்கு கிரையம் கொடுத்தார்களோ அவரவர்களின் நிலத்தினை அவரவர்கள் பயிர் செய்கிறார்கள் என்றால் நானும் பயிர் செய்கிறேன், அவர்களும் பயிர் செய்கிறார்கள். 1ம் பிரதிவாதி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் இல்லை. 1ம் பிரதிவாதி பிள்ளைகள் யார்

என்றால் தெரியாது. அவர் வேறு இடத்தில் உள்ளார் நான் வேறு இடத்தில் உள்ளேன். சர்வே எண் 80/2 யார் பெயரில் உள்ளது என்றால் 3ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அதன் விஸ்தீர்ணம் என்ன என்றால் 1 ஏக்கர். என் நிலத்திற்கு அருகிலா அல்லது தொலைவிலா என்றால் அருகில். என் நிலமான 79/1க்கு அருகில் தான் மேற்சொன்ன 80/2 உள்ளது.

8. 1ம் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே இருந்த பணப்பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பிறர் சொல்லி தெரியும். அதேபோல் 1ம் பிரதிவாதி பணத்தினை திருப்பி செலுத்திவிட்டால் மீண்டும் கிரையப்பத்திரத்தினை 1ம் பிரதிவாதிக்கு 1ம் வாதி எழுதிக்கொடுக்க வேண்டும் என்று கூறியிருப்பின் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பிறர் சொல்லி தெரியும். இன்றை தேதியில் கிரையப்பத்திரப்படிக்கு வழக்கு சொத்து 1ம் வாதிக்கு சொந்தமானது என்றால் அது குறித்து தெரியாது. 1ம் வாதியி 1985ல் தான் கிரையம் பத்திரம் மூலம் வழக்கு சொத்தினை வாங்கினார் என்றால் சரிதான். நாங்கள் 1987ல் வாங்கினோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, 1ம் வாதிக்கு எழுதி கொடுத்த கிரையம் பத்திரம் குறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் என் தந்தையை தான் கேட்கவேண்டும். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை.

9. 1ம் பிரதிவாதி ஏற்கனவே விற்பனை செய்த சொத்தினை மீண்டும் எங்களுக்கு விற்பனை செய்ததை குறித்து நாங்கள் 1ம் பிரதிவாதியிடம் சென்று எதுவும் கேட்கவில்லையா என்றால் பிரச்சனை எதுவும் இல்லாத காரணத்தினால் கேட்கவில்லை. வழக்கு குறித்த விவரம் எனக்கு சரியாக தெரியவில்லை என்றும், வாதி கோரியபடி இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.22. பி.எம்.**